# உங்கள் குழந்தையின் பொது மயக்க மருந்து

உங்கள் குழந்தை பொது மயக்க மருந்து மூலம் அறுவை சிகிச்சை செய்து கொள்ள மருத்துவமனைக்கு வரும்போது என்ன எதிர்பார்க்கலாம் என்பதை இந்த துண்டுப்பிரசுரம் விளக்குகிறது. நோயாளியின் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்களுடன் இணைந்து மயக்க மருந்து நிபுணர்களால் இந்தக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

## மயக்க மருந்து மற்றும் மயக்க மருந்து நிபுணர்கள்

ஒரு அறுவை சிகிச்சை அல்லது செயல்முறையின் போது உங்கள் குழந்தை மயக்கமடைந்து வலியின்றி இருப்பதை **ஒரு பொது மயக்க மருந்து** உறுதிப் படுத்துகிறது.

**மயக்க மருந்து நிபுணர்கள்**அறுவைச் சிகிச்சை மற்றும் நோய் மீட்பின் போது மயக்க மருந்து கொடுத்து உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்தை கவனிக்கும் சிறப்பு மருத்துவர்கள். அறுவை சிகிச்சைக்கு பின் உங்கள் குழந்தையின் வலி நிவாரணத்தில் கூட அவர்கள் நெருக்கமாக ஈடுபடுகிறார்கள்.

**மயக்க மருந்துகள்** என்பது மயக்க நிலையைத் தொடங்கி அதைப் பராமரிக்கப் பயன்படும் மருந்துகள்.

- சில மயக்க மருந்துகள், கானுலா எனப்படும் பிளாஸ்டிக் குழாயைப் பயன்படுத்தி, ஒரு நரம்புக்குள் ஊசி கொடுப்பதன் மூலம் ஆரம்பிக்கின்றன, ஆனால் பிறகு ஒரு வாயுவை சுவாசிப்பதன் மூலம் தொடரலாம்.
- மற்ற மயக்க மருந்துகள் ஒரு வாயுவை சுவாசிப்பதன் மூலம் ஆராம்பிக்கின்றன, பின்னர் உங்கள் குழந்தை தூங்கும்போது ஒரு கானுலா போட்டு விடப்படும்.

மயக்க மருந்துகள் அல்லது ஊசிகள் எடுத்துக்கொள்வதில் உங்கள் குழந்தையினுடைய முந்தைய அனுபவங்களைப் பற்றி மயக்க மருந்து நிபுணர் அல்லது முன் மதிப்பீட்டு செவிலி உங்களிடம் கேட்பார். மயக்க மருந்து எவ்வாறு வழங்கப்படலாம் என்பதன் முறைப்பற்றியும் மற்றும் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் ஏதாவது விருப்பத்தேர்வு உள்ளதா என்பதையும் அவர்கள் வழக்கமாக கலந்தாலோசிப்பார்கள். பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட வழியில் ஏன் நடைமுறைகளை செய்ய வேண்டுமென்பதற்கு மருத்துவக் காரணங்கள் உள்ளன, மேலும் மயக்க மருந்தைத் தொடங்க அவர்கள் விரும்பும் விதம் மற்றும் (காரணங்கள்) ஏன் என்று உங்களுடன் பேசுவார்கள். உங்கள் விருப்பங்களும் உங்கள் குழந்தையின் விருப்பங்களும் மிக முக்கியமானவை.

மயக்க மருந்து நிபுணருடன் கலந்துரையாடிய பிறகு, உங்களுடன் கலந்தாலோசித்த திட்டங்களில் ஒன்று பொதுவாகப் பின்பற்றப்படும். நெருக்கடியான நேரத்தில் உங்கள் குழந்தையின் எதிர்வினை மற்றும் மறுமொழி பொறுத்து சில நேரங்களில் எதிர்பார்க்கப்படும் வரிசைக்கிரமம் மாறக்கூடும்.

அறுவைச் சிகிச்சை நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ உங்களுக்கு ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், நீங்கள் அதை எழுப்ப முடியும்.

அதிகப் பயிற்சி பெற்ற சுகாதார நல வாழ்க்கைத் தொழிலர்களான மயக்கமருந்து கூட்டாளிகளையும் நீங்கள் சந்திக்கலாம். நீங்கள், கீழ்வரும் எங்கள் வலைதளத்தில் மயக்கமருந்துக் குழு மற்றும் அவர்கள் பங்கு பற்றி மேலும் படிக்கலாம்: www.rcoa.ac.uk/patientinfo/anaesthesia-team

## உங்கள் குழந்தையைத் தயார் செய்தல்

உங்கள் குழந்தை மருத்துவமனை வருவதற்கு முன்னேற்பாடு செய்ய நீங்கள் செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன.

உங்கள் குழந்தை மிகவும் இள வயதில் இருந்தாலே தவிர, நீங்கள் முயற்சி செய்து விளக்க வேண்டும்:

- அவர்கள் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள் என்று
- அவர்களுக்கு ஒரு அறுவைச் சிகிச்சை நடைபெறப் போகிறது அல்லது ஒரு உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படப் போகிறார்கள் என்று
- அவர்கள் மருத்துவமனையில் இருக்கும்போது அவர்களுக்கு என்ன நடக்கும் என்பது பற்றிய சில அடிப்படைத் தகவல்கள்.

இந்தத் தகவலைச் சொல்ல சிறந்த நேரம் குழந்தைக்கு குழந்தை வேறுபடும். பாலர் பள்ளிக் குழந்தைகள் அநேகமாக முந்தைய நாள் தெரிந்துகொண்டால் போதும். வயதானக்குழந்தைகளுக்கு அதிக நேரம் தேவைப்படலாம்.

*குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்*பக்கங்களிலிருந்து கீழ்க்கண்ட கல்லூரி வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்ய வெவ்வேறு வயது குழந்தைகளுக்கான துண்டு பிரசுரங்களும் உள்ளன: www.rcoa.ac.uk/patient-information/translations/tamil

- *ரீஸ் கரடி ஒரு மயக்க மருந்து எடுத்துக் கொள்கிறது* (3-6 வயதானவர்கள் ஒரு வயதான வாசகருடன்).
- *டேவி என்ற துப்பறிவாளர்: மயக்க மருந்துகள் பற்றி அறிந்து கொள்வது* (வயது 7–11 வருடங்கள்)
- *பொது மயக்க மருந்து: இளைய மக்களுக்கான ஒரு சுருக்கமான வழிகாட்டி* (வயது 12 மற்றும் அதற்குக் கூடுதலாக)

*எனது டேகேஸ் அறுவைச் சிகிச்சை: ஒரு எளிதில் வாசிக்கக்கூடியது* மற்றும் அணுகக்கூடிய ஆதாரங்களும் இங்கே கிடைக்கின்றன:
www.rcoa.ac.uk/patient-information/translations/tamil

*ஒரு சற்று ஆழமான தூக்கம் - மயக்க மருந்துக்கான குடும்ப வழிகாட்டி* அசைவூட்டமும் உள்ளது, இது 12 வயது வரையிலான குழந்தைகளுக்கு உதவியாக இருக்கும்: (www.vimeo.com/138062201).

சில மருத்துவமனைகள் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் அறுவை சிகிச்சைக்கு முந்திய நாள், குழந்தைகளின் அறுவைச் சிகிச்சை படுக்கைத் தொகுதியைப் பார்வையிட வாய்ப்பளிக்கின்றன. உங்கள் குழந்தையைத் தயார் செய்ய உதவவும் பதட்டத்தைக் குறைக்கவும் இது ஒரு சிறந்த வழியாகும். பல மருத்துவமனைகளில் ஒரு விளயாட்டு-சிகிச்சை குழு உள்ளது, அவர்கள் விளக்கங்களை வழங்கலாம் மற்றும் விளையாட்டுகள் மூலம் கலந்துரையாடலை ஊக்குவிக்க முடியும்.

## உங்கள் குழந்தைக்கு என்னக் கூறுவதுஎன்ற சில ஆலோசனைகள்

- அவர்களின் சூழ்நிலைகளைப் பொறுத்து, அறுவை சிகிச்சை அல்லது சோதனை உங்கள் குழந்தை நன்கு சுகமடையவும் அல்லது ஓரளவு சுகமடையவும் உதவும் என்பதை விளக்குங்கள்.
- அறுவை சிகிச்சையைப் பற்றி பேசவும் கேள்விகளைக் கேட்கவும் உங்கள் குழந்தையை ஊக்குவிக்கவும். புத்தகங்கள், விளையாட்டுகள் மற்றும் கதைகள் உதவக்கூடும். கல்லூரி வலைத்தளத்தில் வண்ணம் தீட்டக்கூடிய தாள்கள் போன்ற வளங்கள் இருக்கின்றன:
  www.rcoa.ac.uk/patient-information/translations/tamil
- உங்கள் குழந்தைக்கு (அறுவைச் சிகிச்சை) நேரம் பற்றி சொல்லுங்கள். அவர்களுக்கு எப்போது அறுவைச் சிகிச்சை அல்லது சோதனைகள் இருக்கும்? அவர்கள் மருத்துவமனையில் எவ்வளவு காலம் தங்கியிருப்பார்கள் (இது உங்களுக்குத் தெரிந்திருந்தால்)?

உங்கள் குழந்தை அன்றிரவில் மருத்துவமனையில் தங்கினால், நீங்களும் தங்க முடியுமா என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். இது சாத்தியமா என்று நிச்சியமாக உங்களுக்குத் தெரியாவிட்டால், உறுதிப்படுத்திக் கொள்ள மருத்துவமனையை அழைக்கலாம்.

நீங்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டியது குறித்து உங்கள் செவிலியர் உங்களுக்கு ஆலோசனை வழங்கலாம், ஆனால் உங்கள் குழந்தை வழக்கமாக எடுத்துகொள்ளும் மருந்து பொருட்களை அசல் கட்டுடன், பைஜாமாக்கள், ஒரு பல் துலக்கி, ஹேர் பிரஷ், மாற்றுவதற்கு உள்ளாடை அல்லது நாப்பி மற்றும் குழந்தைக்குப் பிடித்த டெட்டி அல்லது பொம்மையையும் தயவு செய்துஎடுத்து வரவும். எதைப் பொதி செய்யவேண்டும் என்று தீர்மானிப்பதை குழந்தைகள் பெரும்பாலும் ரசிக்கிறார்கள், ஆனால் அதிகமான பொம்மைகளைச் சேர்க்காமல் இருப்பது நல்லது.

கைப்பேசிகள் மற்றும் டேப்லெட்டுகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும், ஆனால் உங்கள் மின்னூட்டி மற்றும் ஹெட்ஃபோன்களைக் கொண்டு வருவதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் குழந்தை வீடு திரும்பும்போது தயாராக இருக்க பாராசிட்டமால் மற்றும் இபுஃப்ரூபன் போன்ற வலி நிவாரணி மருந்துகளை நீங்கள் கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். அவற்றை எவ்வாறு எடுத்துக்கொள்வது என்று உங்கள் மருத்துவமனை உங்களுக்கு ஆலோசனை வழங்கும்.

## அறுவைச் சிகிச்சைக்கு முன் உடல் நிலை சரியாக இல்லையா?

அறுவை சிகிச்சைக்கு இரண்டு வாரங்களுக்குள் இருக்கும்போது, உங்கள் குழந்தைக்கு குறிப்பிடத்தக்க இருமல் அல்லது சளி ஏற்பட்டால், அல்லது அறுவை சிகிச்சைக்கு சில நாட்களிலிருக்கும்போது, வயிற்றுப்போக்கு அல்லது வாந்தி ஏற்பட்டால், நீங்கள் மருத்துவமனையுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் குழந்தை உடல்நிலை நன்றாக ஆகும்வரை அறுவை சிகிச்சையை தாமதப்படுத்த வேண்டி இருக்கலாம்.

மயக்கமருந்து எடுத்துக்கொண்டிருக்கும்போது, இருமல் மற்றும் சளி குழந்தைகளுக்கு, குறிப்பாக இளையவர்களுக்கு சுவாசிப்பதற்கு அதிக சிரமங்களை ஏற்படுத்துவது சாத்தியம். அவைகள் குழந்தைகளை மார்பு தொற்று ஏற்படுவதற்கான அதிக அபாயத்தில் வைக்கக் கூடும். எனவே உங்கள் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் மருத்துவமனை ஊழியர்களுக்கு அதைத் தெரியப்படுத்துவது அவசியம்.

உங்கள் குழந்தை சின்னம்மை, தட்டம்மை அல்லது பிற நோய்த்தொற்றுகளுடன் சமீபத்தில் பாதிக்கப்பட்டு இருந்தாரா என்பதை மருத்துவமனை ஊழியர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

தடுப்பூசி மருந்தேற்றல் ஒரு முக்கியமான மருத்துவ இடையீடாகக் காணப்படுகின்றது அத்துடன் தேசிய சுகாதாரத் திட்டத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடுப்பூசி மருந்தேற்றல் வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அனைத்து பெற்றோரையும் நாம் கேட்டுக் கொள்கின்றோம் www.nhs.uk/conditions/vaccinations

அண்மையில் தடுப்பு மருந்தேற்றப்பட்ட சிறுவர்களுக்கு சத்திர சிகிச்சைக்காக மயக்க மருந்து வழங்கப்படுவது சாதாரணமாக ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதில்லை. எனினும் அவ்வாறான

சிறுவர்களுக்கு சத்திர சிகிச்சைக்கு சற்று முன்னர் காய்ச்சல் ஏற்படுமாக இருந்தால் சத்திர சிகிச்சையை பிற்போடுவது சில வேளைகளில் சிறந்ததாகும். இது மிகவும் அசாதாரணமான நிகழ்வேயாகும். எனவே திட்டமிடப்பட்ட தடுப்பு மருந்தேற்றலை மேற்கொள்ளுமாறும் திட்டமிடப்பட்ட சத்திர சிகிச்சை காரணமாக அதனை பிற்போட வேண்டாம் எனவும் நாம் பெற்றோருக்கு அறிவுரை வழங்குகின்றோம்.

## சத்திரசிகிச்சைக்கு முன்னரான மதிப்பீட்டுக்கான மருத்துவர் சந்திப்பு / தொலைபேசி மூலமான சோதனை

உங்கள் பிள்ளையின் உடல் நலம் மற்றும் மருந்துப் பாவனை பற்றி அறிந்து கொள்ள சிகிச்சைக்கு முந்திய தினம் வைத்தியசாலையில் இருந்து ஒரு தாதி தொலைபேசி மூலம் உங்களை அழைத்து விபரங்களைப் பெற்றுக்கொள்வார். மேலதிக சோதனைகள் அல்லது கருவிகள் சத்திர சிகிச்சைக்கு அவசியமாயின் சத்திர சிகிச்சைக்கு முந்திய தினத்திலேயே ஏற்பாடு செய்வதற்கான கால அவகாசத்தை இது வழங்கும்.

பிள்ளைகளை, விசேடமாக நீண்ட கால நோய் கொண்ட பிள்ளைகளை அல்லது பெரிய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ள பிள்ளைகளை சத்திர சிகிச்சைக்கு முன்னரான மதிப்பீட்டு மருத்துவர் சந்திப்புக்காக அழைப்பது அதிகமான மருத்துவ மனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். அங்கு மருத்துவர்கள் உங்கள் பிள்ளையின் உடல்நலம், பயன்படுத்தும் மருந்துகள் மற்றும் ஒவ்வாமைகள் தொடர்பான கேள்விகளை கேட்பார்கள். சிகிச்சைக்கு முன்னர் ஏதாவது தொற்றுக்கள் உள்ளனவா என அறியவும் தேவையான இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் அங்கு அவர்கள் தோலில் இருந்து கசம நீர் மாதிரியை (தோலினை மிருதுவான பஞ்சுத்துண்டைப் பயன்படுத்தி மெதுவாக அழுத்தி) எடுப்பார்கள். அவர்கள் பிள்ளைக்கும் உங்களுக்கும் பிள்ளை அனுமதிக்கப்படப் போகும் மருத்துவ விடுதியைக் காண்பிப்பதோடு பிள்ளையின் சிகிச்சை தொடர்பான தகவல்களையும் உங்களுக்கு வழங்குவார்கள். நீங்கள் அங்கு மயக்க மருந்து மருத்துவர் ஒருவரையும் சந்திக்கலாம். அவர் மயக்க மருந்து சம்பந்தமாகக் காணப்படும் தெரிவுகள் பற்றியும் ஏதாவது குறிப்பிட்ட அபாயங்கள் இருப்பின் அவை பற்றியும் உங்களுடன் கலந்துரையாடுவார்.

# உங்களின் பிள்ளையின் சிகிச்சை தினத்தன்று

உங்கள் பிள்ளை எப்போது உணவு உட்கொள்வதையும் குடிப்பதையும் நிறுத்த வேண்டும் என்ற தெளிவான அறிவுரையை வைத்தியசாலை வழங்க வேண்டும். இந்த அறிவுரைகளை நீங்களும் உங்கள் பிள்ளையும் பின்பற்றுவது முக்கியமானதாகும். பிள்ளைக்கு மயக்க மருந்து வழங்கப்படும் வேளை உங்கள் பிள்ளையின் வயிற்றினுள் உணவு அல்லது திரவம் காணப்படின் அவை தொண்டைப்பகுதிக்கு வந்து பின்னர் நுரையீரலுக்குள் சென்றுவிடும்.

உணவு மற்றும் குடிபானங்களுக்காக பிள்ளைகள் தேவைக்கு அதிகமாக காக்க வைக்கப்படாவிட்டால் பிள்ளைகள் மிகவும் சௌகரியமாக இருப்பார்கள்.

பின்வருவன அவசரமற்ற சிகிச்சை ஒன்றுக்கு முன்னர் உங்கள் பிள்ளைக்கு உண்ண அல்லது குடிக்க ஏதாவது வழங்குவதற்கு பொதுவாக உடன்பாடு காணப்பட்ட நேரங்களாகும், எவ்வாறாயினும், வைத்தியசாலை வழங்கும் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள், அவை வித்தியாசமானவையாக இருக்கக்கூடும்.

- சிகிச்சைக்கு ஆறு மணி நேரங்களுக்கு முன்னர் இலேசான உணவு அல்லது / அத்துடன் ஒரு கோப்பை பால் என்பவற்றை உட்கொள்ளலாம். அதன் பின் அவர்கள் இனிப்புகள் உள்ளடங்கலாக எதனையும் உன்னக் கூடாது அத்துடன் சூயிங் கம் உட்கொள்வதையும் தவிர்க்க வேண்டும்.
- தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் சிகிச்சைக்கு நான்கு மணிநேரங்களுக்கு முன்னர் வரை தாய்ப்ப்பால் குடிக்கலாம்.
- புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகள் சிகிச்சைக்கு ஆறு மணிநேரங்களுக்கு முன்னர் வரை புட்டிப்பால் குடிக்கலாம் (மிகவும் சிறிய அல்லது முதிர்ச்சி அடையாத குழந்தைகளுக்கு வித்தியாசமான அறிவுரைகள் ஏதும் உள்ளனவா என உங்களின் வைத்தியசாலையிடம் கேளுங்கள்).

- சிகிச்சைக்கு ஒரு மணிநேரத்திற்கு முன்னர் வரை பிள்ளைகள் நீர் அல்லது மிகவும் ஐதான சாறுகளை அருந்துவதை தொடரவேண்டும். இது அவர்கள் நன்கு நீரைப் பெறவும் சௌகரியமாக இருக்கவும் உதவும்.

சில அலகுகள் பிள்ளைகள் குறித்த அலகை அடைந்தவுடன் ஏதாவது ஒன்றைக் குடிக்க அனுமதிக்கின்றன அல்லது ஊக்குவிக்கின்றன.

அண்மையில் உங்கள் பிள்ளை உணவு உட்கொண்டிருந்தால், சத்திர சிகிச்சை தாமதிக்கப்படும் அல்லது வேறொரு நாளுக்கு பிற்போடப்படும்.

சத்திர சிகிச்சை இடம்பெறும் நாளில் உங்கள் குழந்தை அறிவுரை வழங்கப்பட்டதற்கு ஏற்ப மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

நீங்கள் வைத்தியசாலையை அடைந்தவுடன் உங்கள் பிள்ளையின் நிறை மற்றும் அளவு என்பன எடுக்கப்படும் (இது முந்தைய வைத்தியசாலை விஜயத்தில் ஏற்கனவே செய்யப்படாவிட்டால்). ஒரு தாதி அவர்களின் உடல் வெப்பநிலை, நாடித்துடிப்பு வீதம், சுவாச வீதம் என்பவற்றை சோதனை செய்வதோடு அவர்களின் ஒட்ஸிசன் மட்டம் அத்துடன் இரத்த அழுத்தம் என்பவற்றையும் அளவிடுவார்.

12 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு பெண் பிள்ளைக்கும் சிறுநீர் மாதிரியைப் பயன்படுத்தி கருத்தரித்தல் சோதனை மேற்கொள்ளப்படுவது நியமமான ஒரு நடைமுறையாகும். மேலும் அதிக தகவல்களை பெற றோயல் கல்லூரியின் குழந்தைகள் மற்றும் பிள்ளைகள் சுகாதாரப் பிரிவின் இணையத்தளத்தை நோக்கவும்:

www.rcpch.ac.uk/resources/pre-procedure-pregnancy-checking-under-16s-guidance-clinicians

தாதி ஒவ்வாமைகள் மற்றும் பயன்படுத்தும் மருந்துகள் பற்றி கேட்பதோடு பிள்ளையின் மணிக்கட்டில் அல்லது கணுக்காலில் இரண்டு அடையாளப்படுத்தும் பட்டிகளை இடுவார். சில வைத்தியசாலைகளில், பிள்ளைகளுக்கு ஒவ்வாமைகள் காணப்படின் அவர்களுக்கு மேலுமொரு பட்டி ஒன்றை அல்லது வேறு நிறத்தில் அமைந்த பட்டி ஒன்றை அணிவிப்பார்கள்.

மயக்க மருந்தேற்றல் செயற்பாட்டுக்கு முன்னர் உங்கள் பிள்ளையின் மயக்க மருந்தேற்றல் தொடர்பில் உங்களுடன் கலந்துரையாட மயக்க மருந்தேற்றல் வைத்திய நிபுணர் ஒருவர் உங்களை சந்திப்பார்.

மயக்க மருந்தேற்றல் வைத்திய நிபுணர் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக உங்களின் பிள்ளையின் பொதுவான சுகாதார விடயங்களை அறிய வேண்டும்:

- முந்தைய மயக்க மருந்தேற்றல் அனுபவங்கள்
- உங்கள் பிள்ளை உட்கொள்ளும் ஏனைய மருந்துகள்
- அவர்கள் கொண்டுள்ள ஏதாவது ஒவ்வாமைகள்
- அண்மையில் அவர்களுக்கு ஏற்பட்ட இருமல், காய்ச்சல்கள் அல்லது வயிற்றோட்டம் மற்றும் வாந்தி.

உங்களின் பிள்ளை அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்கள் மயக்க மருந்து தொடர்பில் முந்தை சிரமங்கள் எவற்றையேனும் கொண்டிருப்பின், அது பற்றி நீங்கள் அல்லது உங்களது உறவினரிடம் உள்ள எந்த ஒரு தகவலையும் மயக்க மருந்தேற்றல் நிபுணரிடம் கூறுவது மிகவும் முக்கியமானது.

உங்கள் பிள்ளை மயக்க மருந்து தொடர்பில் ஏதாவது கரிசனைகளைக் கொண்டிருப்பின் அவை பற்றி உரையாடுவதற்கும் இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும். நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளின் பட்டியல் ஒன்றை தயாரிப்பது உங்களுக்கு உதவும் விடயமாக அமையக்கூடும்.

உங்களின் பிள்ளைக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சைக்கு ஏற்ப, பிள்ளை உறக்கத்தில் உள்ள நிலையில் ஒரு சாதாரண மயக்க ஊசி மருந்தேற்றலை மேற்கொள்வதன் மூலம் பிள்ளையின் நரம்புகளை மரக்க வைப்பதன் ஊடாக பின்னரான வலி நிவாரணத்தை வழங்க முடியும்.

அவர்களுக்கு மேலும் அதிக துளி மருந்தேற்றல் பயன்படுத்த வேண்டிய தேவை எழலாம். அவர்கள் இதனை மேற்கொள்வதற்கான காரணம் பிள்ளை உறக்கத்தில் உள்ள நிலையில் அதனை பாதுகாப்பதற்கு மற்றும் உறக்கத்தில் இருந்து விழித்தெழும் வேளை பிள்ளை சௌகரியமாக உணர்வதற்கு இக்கருவியின் முக்கியத்துவம் போன்ற விடயங்களை உங்களுடன் கலந்துரையாடுவார்கள்.

## சத்திரசிகிச்சையை அல்லது சோதனையை தாமதப்படுத்தல்

சில சமயங்களில் இந்த மதிப்பீட்டின் பொழுது மயக்க மருந்தேற்றல் வைத்திய நிபுணர் உங்கள் பிள்ளை பற்றி அறியும் தகவல்கள் குறித்த தினத்தில் சத்திர சிகிச்சை மேற்கொள்வது உங்கள் பிள்ளைக்கு பாதுகாப்பானது அல்ல என்ற விடயத்தை அறியும் வாய்ப்பும் உள்ளது. அவ்வாறு நிகழும் பட்சத்தில், சத்திர சிகிச்சை எப்போது மேற்கொள்வது பாதுகாப்பு மிக்கது அல்லது சத்திர சிகிச்சை மேற்கொள்வது அபாயகரமானதா என்பது போன்ற விடயங்கள் பற்றி உங்களுக்கு அறிவுரை வழங்குவார்கள்.

## முன் மருந்து வழங்கல் ('முன்-மருந்து')

இதுவே மயக்க மருந்துக்கு முன்னர் வழங்கப்படும் மருந்தின் பெயராகும்.

மயக்க மருக்கேற்றும் வைத்திய நிபுணர் உங்கள் பிள்ளை ஓய்வடைய உதவும் அமைதிப்படுத்தும் மருந்து வழங்கல் பற்றியும் உங்களுடன் கலந்துரையாடக் கூடும். இருந்தாலும், அறுவைச் சிகிச்சைக்குப் பின் இவை குழந்தைகளை உணர்வு மழுங்கிய நிலையில் வைக்கக்கூடும் என்பதால், அவை வழக்கமாகக் கொடுக்கப் படுவதில்லை. வலி நிவாரண மருந்துகள் முன்-மருந்தாகவும் கொடுக்கப்படலாம், அல்லது மயக்கமருந்து நிபுணர், ஆஸ்துமா போன்ற நிலைகளுக்கு கூடுதல் சிகிச்சைகளும் பரிந்துரைக்கலாம்.

பெரும்பாலான முன்-மருந்துகள் திரவ மருந்துகளாக கொடுக்கப்படுகின்றன.

## ஓரிடவுணர்ச்சிநீக்கி களிம்பேடு

கிட்டத்தட்ட எல்லா குழந்தைகளுக்கும் 'மேஜிக் களிம்பேடு' கைகளின் பின்புறம் தடவப்பட்டு, ஒரு தெளிவான காயக்கட்டினால் மூடப்படும். சில சமயங்களில் இது 'அமேடாப்',எம்லா' அல்லது வேறொரு வர்த்தகப் பெயரால் அழைக்கப்படும். இது வேலை செய்ய 30--60நிமிடங்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஓரிடத்து உணர்வுநீக்கி களிம்பேடு.

கானுலா உங்கள் குழந்தையின் கை அல்லது மேற்கையில் வைக்கப்படும் போது ஏற்படும் கூருணர்ச்சி வலியை இந்தகளிம்பேடு குறைக்கிறது. பத்தில் ஒன்பது குழந்தைகளுக்கு வலியைக் குறைப்பதில் அது நன்றாக வேலை செய்கிறது.

களிம்பேடு பயன்படுத்த முடியாவிட்டால், பகுதியை மரக்கச் செய்வதற்கு ஒரு குளிர் ஓரிடவுணர்ச்சிநீக்கி திவலைத் தூவு பயன்படுத்தப் படலாம்.

## அறுவைச்சிகிச்சை அரங்கிற்கு செல்லும்போது

பெரும்பாலான மருத்துவமனைகள் அறுவை சிகிச்சை அரங்கிற்குச் செல்லும்போது உங்கள் குழந்தை அணிய வண்ணமயமான அங்கிகள் வழங்குகின்றன. உங்கள் குழந்தை தங்கள் சொந்த ஆடைகள் அல்லது பைஜாமாக்கள் அணிய முடியலாம் என்றாலும் கூட. அவர்கள் தேவைக்கேற்ப ஒரு அணையாடை அல்லது இழுத்து மாட்டிக் கொள்ளும் ஆடைகளை அணியலாம். எந்த உள்ளாடைகளை அணியலாம் என்று உங்கள்செவிலியர் உங்களுக்கு ஆலோசனைக் கூறுவார்.

உங்கள் குழந்தை மயக்க அறைக்கு நடந்து செல்லலாம், அல்லது படுக்கை, சக்கர நாற்காலி அல்லது மருத்துவமனை தள்ளுவண்டியில் செல்லலாம், அல்லது தூக்கிச் செல்லப்படலாம். சில மருத்துவமனைகள் மிகவும் வேடிக்கையான போக்குவரத்து வகைகளை வழங்குகின்றன. சில மருத்துவமனைகளில், ஒரு மின்சார காரில் பயணம் செய்யும் சலுகையை அவர்கள் வழங்கலாம்.

## மயக்கமருந்து அறையில்

மருத்துவமனைப் படுக்கைத் தொகுதியிலிருந்து, ஒரு செவிலியர் அல்லது விளையாட்டு நிபுணர் போன்ற ஒரு உடல்நல காப்பாளர் உங்களுடனும் உங்கள் குழந்தையையுடனும் மயக்கமருந்து அறைக்கு வருவார். உங்கள் குழந்தை ஒரு பொம்மை அல்லது ஆறுதல் அளிக்கும் ஒரு பொருளை எடுத்துச் செல்லமுடியும். விளையாட்டு அல்லது பிடித்த திரைப்படங்களுடன் குழந்தைகளை திசை திருப்ப, கைப்பேசி அல்லது டேப்லெட்டுகள் குறிப்பாக பயனுள்ளதாக இருக்கும்.

நீங்கள் விரும்பினால், மயக்க மருந்து கொடுக்கப்படும் போது உங்கள் குழந்தையுடன் உடனிருக்கும்படி நீங்கள் வரவேற்கப்படுவீர்கள். மிகக் குறைந்த சூழ்நிலைகளில் மட்டுமே இது சாத்தியமில்லாமல் இருக்கலாம். மயக்க மருந்து குழு உங்கள் குழந்தையை கவனித்துக்கொள்வதற்காக, உங்கள் குழந்தை தூங்கியவுடன், ஒரு ஊழிய உறுப்பினர் உங்களை அரங்கப் பகுதியிலிருந்து வெளியே அழைத்துச் செல்வார்.

உங்களுக்கே மிகவும் கவலையாக இருந்தால், நீங்கள் உங்கள் குழந்தையுடன் மயக்கமருந்து அறைக்குச் செல்லத் **தேவை இல்லை** . மற்றொரு வயதுவந்த குடும்ப உறுப்பினர் அல்லது மருத்துவமனை படுக்கைத் தொகுதியிலிருந்து ஒரு செவிலி அல்லது விளையாட்டு சிகிச்சையாளர் அதற்கு பதிலாகச் செல்லலாம்.

உங்கள் குழந்தை ஒரு தள்ளுவண்டியில் படுத்திருக்கையில் மயக்க மருந்து கொடுப்பது தொடங்கப்படலாம். சிறிய குழந்தைகள் உங்கள் மடியில் உட்கார்ந்து இருக்கும்போது மயக்க மருந்து கொடுக்கப்படலாம். ஒருகால், உங்கள் உதவியுடன் ஊழியர்கள் பின்னர் அவர்களை தள்ளுவண்டியில் தூக்கி வைப்பார்கள்.

மயக்க மருந்தைத் தொடங்க, மயக்க மருந்து நிபுணர் ஒரு முகமூடி அல்லது குழாயிலிருந்து வரும் வாயுவைப் பயன்படுத்துவார் அல்லது ஒரு கானுலா வழியாக ஊசி போடுவார். இது உங்களுடன் முன்பே விவாதிக்கப்பட்டிருக்கும், இருப்பினும் சில சமயங்களில் உங்கள் குழந்தையால் ஒத்துழைக்க முடியாவிட்டால் திட்டத்தைமாற்ற வேண்டியிருக்கும்.

பெரும்பாலான வயதான குழந்தைகளுக்கு ஒரு கானுலா மூலம் ஊசி போடப்படும். கானுலா பயன்படுத்தப் பட்டால்,வழக்கமாக உங்கள் குழந்தை விரைவில் உணர்விழந்து நெகிழ்ந்துவிடும். சில நேரங்களில் ஊசி மேற் கையில் குளிர்ச்சியான அல்லது முட்கள் குத்துவது போன்ற உணர்வு ஏற்படுத்தலாம். மயக்க மருந்து நிபுணர் ஒரு முகமூடியைப் பயன்படுத்தி மயக்க மருந்தைத் தொடர்ந்து கொடுத்து பாதுகாப்பிற்காக கூடுதல் ஆக்ஸிஜனை வழங்கவும் செய்வார்.

மயக்க மருந்து வாயுவுடன் தொடங்கப்படுகிறது என்றால்,மயக்கமருந்து நிபுணர் பொதுவாக வாயுவைக் கொடுக்க ஒரு முகமூடியைப் பயன்படுத்துவார், அல்லது வாயுவை, உங்கள் குழந்தையின் மூக்கு மற்றும் வாய் மேல் மெதுவாக உட்குவிந்த வடிவில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கை வழியாக அனுப்புவார்கள். மயக்கமருந்து வாயுக்கள் ஃபெல்ட்-முனை பேனாக்கள் போன்ற வாசனையுடன் இருக்கும்.

மயக்கமருந்து வேலை செய்ய பொதுவாக சிறிது நேரம் எடுத்துக் கொள்ளும் (சில வினாடிகளிலிருந்து சில நிமிடங்கள் வரை எதுவாகிலும்). இந்த நேரத்தில் குழந்தை அமைதியின்றி இருப்பது அல்லது அவர்களின் சுவாசம் வித்தியாசமாக ஒலிப்பது மிகவும் சாதாரணமான நிகழ்வு. அவர்கள் சத்தமாக குறட்டை கூட விடக்கூடும். உங்கள் குழந்தையை மெதுவாக ஆனால் உறுதியாகப் பிடித்துக்கொள்ள ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

பின்னர் மயக்க மருந்து அறையிலிருந்து வெளியேறும்படி நீங்கள் கேட்டு கொள்ளப்படுவீர்கள். ஊழியர்களில் ஒருவர் உங்களுடன் அரங்கத்திற்கு வெளியே உங்களுடன் நடந்து வருவார்.

உங்கள் குழந்தைக்கு மயக்க மருந்து கொடுத்தவுடன், மயக்க மருந்து நிபுணர் ஒரு கானுலாவை வைப்பார், இதனால் அவர்கள் வலி நிவாரணம் மற்றும் தேவையான மயக்க மருந்துகளை கொடுக்க முடியும்.

### அடுத்து என்ன நடக்கும்?

அறுவை சிகிச்சை அல்லது செயல்முறைக்கு உங்கள் குழந்தை அறுவை சிகிச்சை செய்யும் அரங்கத்திற்குள் அழைத்துச் செல்லப்படும்.

மயக்கமருந்து நிபுணர் உங்கள் குழந்தையுடன் செயல்முறை முழுவதற்கும் இருந்து, உங்கள் குழந்தையின் இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, சுவாசம் மற்றும் ஆக்ஸிஜன் அளவுகளை உன்னிப்பாக கண்காணித்து, அவை பாதுகாப்பாக இருப்பதையும் முழுமையாக மயக்கம் செய்யப்பட்டிருப்பதையும் உறுதிசெய்வார்.

இப்போது நீங்கள் சென்று ஏதாவது சாப்பிட மற்றும் குடிக்க ஒரு நல்ல நேரம், ஆனால் நீங்கள் செல்கிறீர்கள் என்பதை ஊழியர்களுக்கு தெரியப்படுத்துங்கள், மற்றும் உங்களைத் தொடர்பு கொள்ள அவர்களுக்கு ஒரு கைப்பேசி எண்ணைக் கொடுங்கள்.

# அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர்

### நோய்மீட்டெழும் அறையில்

பெரும்பாலான குழந்தைகள் நோய்மீட்டெழும் அறையில் விழித்துக் கொண்டு விடுகிறார்கள். மயக்க மருந்து நிபுணர் அருகிலேயே இருக்கிறார், மற்றும் தேவைப்பட்டால் அவர் உதவமுடியும். அவர்கள் விழித்தெழுந்திருக்கும்போது, பாதுகாப்பாகவும், கண்பார்வைக்கு வெளியேயும் வைத்திருக்க, அவர்களின் கானுலாவின் மீது ஒரு நோய்க்கட்டு இருக்கும்.

ஒவ்வொரு குழந்தையும் ஒரு சிறப்பு செவிலிஅல்லது பொருத்தமான தகுதிபெற்ற பயிற்சியாளர் மூலம் பராமரிக்கப்படுகிறது, அவர் உங்கள் குழந்தை வசதியாக இருப்பதை உறுதி செய்வார். தேவைப்பட்டால் கூடுதல் வலி நிவாரண மற்றும் நோய் எதிர்ப்பு மருந்துகளை அவர்கள் கொடுப்பார்கள். விழித்தெழும் செயல்பாட்டின் போது ஒரு பொருத்தமான கட்டத்தில் உங்கள் குழந்தையுடன் இருக்க நீங்கள் அழைக்கப்படுவீர்கள்.

### விழித்தெழும்போது கடுந்துன்பம்

சில குழந்தைகள் விழிதெழுந்திருக்கும்போது குழப்பம் மற்றும் / அல்லது கடுந்துயரத்தின் சில அறிகுறிகளைக் காட்டுகிறார்கள். இது இளைய குழந்தைகளில் நிகழ அதிக வாய்ப்பு உள்ளது.

மிகக் குறைவான குழந்தைகள் அதிக உளக்கிளர்ச்சி உடையவர்களாகிறார்கள். அவர்கள் அழுது உருளலாம் அல்லது கை கால்களை அசைக்கலாம். இந்த நடத்தை சுமார் 30 நிமிடங்கள் நீடிக்கலாம் மற்றும் எப்போதாவது அதிக நேரமும் ஆகலாம். இந்த நேரத்தில் குழந்தைகளை கவனித்துக் கொள்வதில் நோய்மீட்டெழுப்பு அறை ஊழியர்கள் அனுபவம் பெற்றவர்கள். இன்னமும் அதிக வலி நிவாரணம் உதவுமா என்பதை அவர்கள் கருத்தில் கொள்வார்கள். உங்கள் குழந்தைக்கு எவ்வாறு சிறப்பாக ஆறுதல் அளிப்பது மற்றும் உறுதியளிப்பது என்பது குறித்து அவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறுவார்கள்.

ஒரு குழந்தை துன்பத்தில் எழுந்தால் இது இயல்பாகவே பெற்றோருக்கு கவலை அளிக்கிறது. கடந்த காலங்களில் உங்கள் குழந்தை இவ்வகை துயரங்களை அனுபவித்திருந்தால் அதை உங்கள் மயக்கமருந்து நிபுணரிடம் சொல்வது நல்லது, அதனால் எதிர்காலத்தில் இது தவிர்க்கப்படக்கூடிய வழிகளை அவர்கள் விவாதிக்க முடியும்.

## வலி நிவாரணம்

உங்கள் குழந்தை முடிந்தவரை வசதியாக எழுந்திருப்பதை உறுதி செய்வதற்காக வலி நிவாரண மருந்துகள் மற்றும் சில நேரங்களில் உள்ளூர் மயக்க ஊசி மருந்துகள் மயக்க மருந்துகளின் போது வழங்கப்படுகின்றன. வலி நிவாரண த்தின் வகை, செயல் முறையைப் பொறுத்து இருக்கும்.

உங்கள் குழந்தைக்கான சிறந்தவகை வலி நிவாரணம் பற்றி மயக்கமருந்து நிபுணர், அறுவைச் சிகிச்சை மருத்துவர் மற்றும் / அல்லது மருத்துவமனை ஊழியர்கள் உங்களுடன் பேசுவார்கள்.

## வீட்டிற்குச் செல்வது

அறுவைசிகிச்சை மற்றும் மயக்க மருந்து நிபுணர் இது ஒரு பாதுகாப்பான வழி என்றும் உங்கள் பிள்ளை நன்றாக குணமடைந்து வருவதாகவும் அறுவை சிகிச்சை மற்றும் மயக்க மருந்து நிபுணர் மகிழ்ச்சியடைந்தால், அறுவை சிகிச்சை அல்லது செயல்முறை நாளில் உங்கள் பிள்ளை வீடு திரும்புவது பெரும்பாலும் சாத்தியமாகும்.

வலி நிவாரண மருந்துகளை வீட்டிலேயே எப்படி கொடுப்பது என்பது குறித்து உங்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். இந்த ஆலோசனையை நீங்கள் கவனமாக பின்பற்ற வேண்டும்.

சில குழந்தைகள் உடல் நிலை சரியில்லை என உணரலாம் அல்லது வீட்டிற்கு செல்லும் போது உடல் நிலை சரியில்லாமலிருக்கலாம். தயாராக இருப்பது உதவியாக இருக்கும்!

அறுவைச் சிகிச்சை நாளன்று உங்கள் குழந்தையை நீங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றால், உங்கள் குழந்தை பற்றி வீட்டில் கவலைகள் இருந்தால், தொடர்பு கொள்வதற்காக உங்களுக்கு ஒரு தொடர்பு எண் கொடுக்கப்படும்.

### பிற்பாடு

சில குழந்தைகள் ஒரு மருத்துவமனை வருகையை கவலையுடன் காண்கிறார்கள். ஒரு சில குழந்தைகள் மருத்துவமனையில் இருந்த பிறகு நன்றாகத் தூங்குவதில்லை. அவர்கள் உங்களை விட்டு வெளியேறுவதைப் பற்றி கவலைப்படுவார்கள். அவர்களின் நடத்தை முன்பை விட அதிகக் கடுமை வாய்ந்ததாக இருக்கலாம். இது பொதுவாக மூன்று முதல் நான்கு வாரங்களுக்குள் இயல்பு நிலைக்குத் திரும்பும்.

## உங்கள் குழந்தையுடைய மயக்கமருந்துடன் தொடர்புடைய அபாயங்கள் மற்றும் பக்க விளைவுகள்

நவீன மயக்க மருந்துகளில் கடுமையான பிரச்சினைகள் பொதுவாக இருப்பதில்லை. அறுவை சிகிச்சை மற்றும் மயக்க மருந்துக்குப் பிறகு பெரும்பாலான குழந்தைகள் விரைவாக குணமடைந்து, விரைவில் இயல்பு நிலைக்கு வருவார்கள். பல குழந்தைகள் சுகமின்மையாக உணரலாம், அல்லது தொண்டையில் இரணம் இருக்கலாம். இவைப் பொதுவாக ஒரு குறுகிய காலம் நீடிக்கும். வாந்தி மற்றும் நோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள் கிடைக்கின்றன, பெரும்பாலும் வழங்கப்படுகின்றன.

நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் ஒரு குழந்தைக்கு சிறு அறுவை சிகிச்சை செய்வது மிகவும் பொதுவானது (பத்து குழந்தைகளில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள்):

- தலைவலி அல்லது தொண்டையில் இரணம்
- நோய் அல்லது தலைச்சுற்றல்
- எழுந்தவுடன் கிளர்ச்சி.

அரிதான சிக்கல்களைப் பார்க்கப்போனால், தோராயமாக 10,000-ல் ஒரு குழந்தைக்கு மயக்கமருந்திற்கு கடுமையான ஒவ்வாமை எதிர்வினை ஏற்படுகிறது.

ஒரு சிறிய அல்லது மிதமான அவசர அறுவை சிகிச்சைக்கு உட்பட்ட ஆரோக்கியமான குழந்தைக்கு மயக்க மருந்து காரணமாக இறக்கும் ஆபத்து 100,000 ல் ஒன்றுக்கும் குறைவாகவே இருக்கும். அறுவை சிகிச்சை நேரத்தில் ஏற்படும் பெரும்பாலான இறப்புகள் நேரடியாக மயக்க மருந்து காரணமாக இல்லாமல், ஒரு நபரின் உடல்நலம் அல்லது அவர்கள் செய்துகொள்ளும் அறுவை சிகிச்சையுடன் தொடர்புடைய பிற காரணங்களால் ஏற்படுகிறது.

மயக்க மருந்து அல்லது மயக்க மருந்து செயல்முறை தொடர்பான பொதுவான அபாயங்களைப் பற்றி படிக்க, தயவுசெய்து எங்கள் வலைத்தளத்தின் ஆபத்து பகுதியைப் பார்க்கவும்:
www.rcoa.ac.uk/patient-information/translations/tamil

## ஆபத்து விளக்கப்பட்டு இருக்கிறது

சொற்களையும் எண்களையும் எவ்வாறு விளக்குகிறார்கள் என்பதில் மக்கள் வேறுபடுகிறார்கள். இதில் உதவுவதற்காக இந்த அளவுகோல் கொடுக்கப் பட்டிருக்கிறது.




| | | | | |
|---|---|---|---|---|
| **10 ல் ஒன்று** | **100-ல் ஒன்று** | **1000-ல் ஒன்று** | **10,000-ல் ஒருவர்** | **100,000-ல் ஒருவர்** |
| ஒரு நபர் உங்கள் குடும்பத்தில் | ஒரு நபர் ஒரு வீதியில் | ஒரு நபர் ஒரு கிராமத்தில் | ஒரு சிறிய நகரத்தில் ஒருவர் | ஒரு பெரிய ஊரில் ஒருவர் |

நவீன மயக்க மருந்துகளில், கடுமையான பிரச்சினைகள் வழக்கமாக இருப்பதில்லை.

உங்கள் குழந்தைக்கு கடுமையான நோய், ஒரு சிக்கலான மருத்துவப் பின்னணி, அல்லது நான்கு வயதிற்கு குறைவாக இருந்து மற்றும்/அல்லது ஒரு பெரிய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால், கடுமையான ஆபத்து அல்லது சிக்கலுக்கான வாய்ப்பு அதிகம்.

குறிப்பிடத்தக்க நோய் உள்ள குழந்தைகள் அல்லது அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் இளம் குழந்தைகள் சில நேரங்களில் மயக்கமருந்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட அபாயங்களைக் கொண்டுள்ளனர். மயக்க மருந்து நிபுணர் இதை அறுவை சிகிச்சைக்கு முன் உங்களுடன் விவாதிக்க முடியும். நவீன உபகரணங்கள், பயிற்சி மற்றும் மருந்துகள் ஒரு மயக்க மருந்தை மிகவும் பாதுகாப்பானதாக ஆக்கியுள்ளன, இருப்பினும் எல்லா ஆபத்துகளையும் முழுமையாக அகற்ற முடியாது.

குழந்தைகள் மற்றும் மிகச் சிறிய குழந்தைகள் மீது, மயக்க மருந்தின் சாத்தியமான நீண்டகால விளைவுகள் குறித்து தொடர்ந்து ஆராய்ச்சி நடந்து வருகிறது. மயக்க மருந்து முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்பதற்கு தற்போது வலுவான ஆதாரங்கள் எதுவும் இல்லை, மற்றும் எந்த ஆபத்தையும் ஒரு செயல்முறை அல்லது அறுவை சிகிச்சைக்கு மயக்க மருந்து வழங்குவதின் ஒட்டுமொத்த முக்கியத்துவடன் சமநிலை செய்து பார்க்க வேண்டும்.

குழந்தை மயக்க மருந்துகளில் முக்கியமான நிகழ்வுகள் குறித்த தகவல்களை ஆன்லைனில் காணலாம்: *யுனைடெட் கிங்டமில் குழந்தை மயக்க மருந்துகளில் கடுமையான சிக்கலான நிகழ்வுகளின் நிகழ்வுகள்: குழந்தைகள் கண்காணிப்பு சோதனையில் மயக்க மருந்து நடைமுறையின் இரண்டாம் பகுப்பாய்வு (APRICOT ஆய்வு):*

www.onlinelibrary.wiley.com/doi/abs/10.1111/anae.14520

கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் குழந்தை மயக்க மருந்து நிபுணர்களின் சங்கத்தின் மேலதிக தகவல்களுக்கு நீங்கள் பின்வருவனவற்றைப் பார்க்க விரும்பலாம்:

www.apagbi.org.uk/guidelines அல்லது
www.apagbi.org.uk/children-and-young-people

வயதான குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு மயக்க மருந்து கிடைப்பதன் பொதுவான அபாயங்கள் பற்றிய தகவல்கள் கல்லூரி இணையதளத்தில் கிடைக்கின்றன:
www.rcoa.ac.uk/patient-information/translations/tamil

வலி நிவாரணம் பற்றிய தகவல்களை எங்கள் துண்டுப்பிரசுரத்தில் காணலாம் *மயக்கமருந்து விளக்கப்பட்டுள்ளது* இது எங்கள் வலைத்தளத்திலிருந்து கிடைக்கிறது:
www.rcoa.ac.uk/patient-information/translations/tamil

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் சொல்லுங்கள்

இந்த துண்டுப்பிரசுரத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

உங்களுக்குக் கூறவேண்டிய கருத்துரைகள் ஏதாவது இருந்தால் அவைகளை இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பவும்: patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
Churchill House, 35 Red Lion Square, London WC1R 4SG
020 7092 1500

## www.rcoa.ac.uk

### ஆறாவது பதிப்பு, பிப்ரவரி 2020

இந்தத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து, 3 வருடங்களுக்குள் மறுபரிசீலனை செய்யப்படும்.

**© 2020 மயக்க மருந்து நிபுணர்களின் ராயல் கல்லூரி**

நோயாளித் தகவல் பொருட்களை உருவாக்கும் நோக்கத்திற்காக இந்த துண்டுப்பிரசுரத்தை நகலெடுக்கலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்த துண்டுப்பிரசுரத்தின் ஒரு பகுதியை வேறொரு வெளியீட்டில் நீங்கள் பயன்படுத்த விரும்பினால், பொருத்தமான ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் மற்றும் சின்னங்கள், முத்திரைப் பெயர் மற்றும் படங்கள் அகற்றப்பட வேண்டும். மேலும் தகவலுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.